# மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நெய்வேலி.

## MC. 6 / 2023

## PW-1

2026-ம் ஆண்டு ஜனவரி மாதம் 23-ம் நாள் வெள்ளிக் கிழமை மனுதாரர் தரப்பு 1-வது சாட்சியின் சாட்சியம்.

உறுதிமொழிச்சட்டம் 1969 பிரிவு-3 ன் படி 23.01.2026 அன்று மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் ஆர்.பாக்யராஜ், எம்.ஏ., பி.எல்., அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | பிரியபாலா | **தொழில்** | : | வீட்டுக்குடித்தனம் |
| **த/பெ.** | : | சக்கரவர்த்தி | **வசிப்பிடம்** | : | வடலூர் |
| **வயது** | : | 49 | **தாலுக்கா** | | குறிஞ்சிப்பாடி |

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி** :

1) கனரா வங்கியில் மட்டும்தான் நானும், எதிர்மனுதாரரும் கூட்டாக கணக்கு வைத்துள்ளோம் என்றாலும், மற்ற இரண்டு வங்கிகளில் எனது பெயரில்தான் கணக்குகள் உள்ளது என்றாலும் சரிதான். அந்த இரண்டு வங்கிகளிலும் எதிரிமனுதாரரின் தொடர்பு எண் தான் கொடுக்கப்பட்டுள்ளது. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமானது எதிர்மனுதாரர் வங்கியில் லோன் வாங்கும்போது கொடுக்கப்பட்ட ஆவணமா என்றால் சாட்சி அதைப்பார்த்துவிட்டு தனக்கு தெரியவில்லை என்று கூறுகிறார். நான் B.Com படித்துள்ளேன் என்றால் சரிதான்.

2) வீடு எந்த வருடம் வாங்கினோம் என்றால் 2018 ல் வாங்கினோம். இடம் வாங்கி அதில் வீடு கட்டினோம். நாங்கள் வீடு வாங்கியபோது அதில் அஸ்திவாரம் ஏதேனும்

போடப்பட்டிருந்ததா என்றால் அதில் 95 வீடுகள் வரப்போகிறது என்றும் அதில் 43 எண் வீடு நம்முடைய வீடு என்றும் எதிர்மனுதாரர் என்னை மனை பூஜைக்கு அழைத்துசென்று காண்பித்தார். நான் மனை பூஜைக்கு சென்ற போது மனையில் அஸ்திவாரம் இருந்ததா என்றால் தற்போது எனக்கு தெரியவில்லை. எப்போது அட்வான்ஸ் கொடுக்கப்பட்டது என்றால் 2018 ம் வருடம் எனது நகையை அடமானம் வைத்து ரூ.8 லட்சத்து 20 ஆயிரம் ரூபாயை மனை விற்பனை செய்பவரிடம் கொடுத்தேன். உடன்படிக்கை ஏற்படுத்திக்கொண்டதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை, தற்போதுதான் அது எனக்கு கிடைத்தது. அதை நான் வைத்துள்ளேன்.

3) தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் உடன்படிக்கையின் நகல்தான் நான் மேலே கூறிய அட்வான்ஸ் கொடுக்கப்பட்டதற்கான உடன்படிக்கை என்றால் சரிதான். (**அது எ.மசா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது (எண்ணிக்கை - 8 தாள்கள்**). தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமானது கிரைய உடன்படிக்கை ஆவணமான என்றால் சாட்சி அதைப்பார்த்துவிட்டு தனக்கு தெரியவில்லை என்று கூறுகிறார், அதில் என்ன தேதி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 16.12.2017 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. நான் தவறாக கூறுகிறேன் என்றாலும் 2017 ம் ஆண்டில்தான் கிரைய உடன்படிக்கை போடப்பட்டது என்றாலும் 2018 ம் ஆண்டு எதிர்மனுதாரர் வெளியில் வட்டிக்கு கடன் வாங்கி மொத்த தொகையையும் கொடுத்து கிரையம் வாங்கினார் என்றாலும் நான் 2018 ம் ஆண்டு கிரைய உடன்படிக்கை போடப்பட்டதாக தவறாக கூறினேன் என்றால் சரியல்ல.

4) எங்கள் எதிர் வீட்டில் இருந்தவர்களின் பெயர் என்னவென்றால் ரமணி ஆகும். அவரது கணவர் பெயர் கண்ணன் என்றால் சரிதான். கண்ணன் மற்றும் ரமணி ஆகியோர் வேறு சமுதாயத்தை சேர்ந்தவர் என்றாலும் கோகுலகண்ணன் என்பவர் வேறு சமுதாயத்தை சேர்ந்தவர் என்றாலும் அவர்கள் எவ்வாறு உறவினர்கள் ஆவார்கள் என்றால்

ரமணியின் மூத்த சகோதரியின் மகளை கோகுலகண்ணன் அவர்களின் குடும்பத்தில் திருமணம் செய்துகொடுத்துள்ளார்கள். அந்த வகையில் அவர்கள் உறவினர்கள் ஆவார்கள். இந்த தகவலை யார் எனக்கு கூறியது என்றால் ரமணி என்பவர் எனக்கு 20 வருடமாக தோழி என்ற முறையில் அவர்தான் என்னிடம் கூறினார். கோகுலகண்ணன் என்பவரின் மனைவி பானு என்பவரும் எனக்கு நெருங்கிய தோழியாவார். மேற்படி ரமணி, பானு மற்றும் கோகுலகண்ணன் ஆகியோர்களை சாட்சிகளாக அழைத்து விசாரிப்பதில் எனக்கு ஆட்சேபனை எதுவும் இல்லை என்றால் சரிதான்.

5) இந்த வழக்கை நான் 2023 ம் ஆண்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் இந்த வழக்கை தாக்கல் செய்தபோது இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தின் பத்தி 11 ல் "நான் இதே பரிகாரம் கோரி இதுபோன்ற மனுவை வேறு எந்த நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யவில்லை" என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மாண்பமை சார்பு நீதிமன்றம், நெய்வேலியில் HMOP.No. 54/2019 ல் ஒரு இடைக்கால எண். 9/2021 தாக்கல் செய்து அதில் இடைக்கால ஜீவனாம்சம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். மாண்பமை சார்பு நீதிமன்றம், நெய்வேலியில் HMOP.No. 56/2019 ல் ஒரு இடைக்கால மனு எண். 107/2019 தாக்கல் செய்து அதில் இடைக்கால ஜீவனாம்சம் கோரியுள்ளேன் என்றால் எனக்கு தெரியவில்லை. 2021 ம் வருடத்திலேயே நான் ஒரு இடைக்கால ஜீவனாம்சம் மனுவை தாக்கல் செய்துவிட்டு 2023 ம் வருடம் தாக்கல் செய்த ஏற்கனவே இதுபோன்ற ஒரு பரிகாரத்தை எந்த நீதிமன்றத்திலும் கோரவில்லை என்று குறிப்பிட்டுள்ள நிலையில் நான் படித்து பார்த்துதான் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு அவசரத்தில் தெரியவில்லை. பிரமாண வாக்குமூலத்தை நான் கூறி தயார் செய்யாமல் வழக்கறிஞர் அவராகவே தயார் செய்து வைத்த பிரமாண வாக்குமூலத்தில் நான் கையொப்பம் செய்துள்ளேனா என்றால் இல்லை.

6) நானும், எனது அம்மாவும் மாவு அரைத்து 20 முதல் 25 பாக்கெட்டுகள் போடுவதாக குறிப்பிட்டுள்ள நிலையில் முறையாக நிறுவனமாக பதிவு செய்து GST செலுத்தி வரி செலுத்துகிறோமோ என்றால் இல்லை, சிறிய அளவில் இரண்டு கிரைண்டர்களை வைத்துக்கொண்டு மாவு அரைத்து அக்கம் பக்கத்தில் உள்ளவர்களுக்கு விற்பனை செய்கிறோம். சிறிய அளவில் தொழில் புரிவதற்கு MSME சான்றிதழ் பெற்றுள்ளேனா என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் துணி கடையில் வேலை செய்தபோது Voucher ல் கையொப்பம் செய்து சம்பளம் பெறுவேன் என்றாலும் அதற்கான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் சம்பளத்தை கையில்தான் பெறுவேன். சில நேரங்களில் உரிமையாளர் G-pay - லும் சம்பளத்தை அனுப்பியுள்ளார். G-pay ல் செலுத்தியதற்கான ஆவணங்கள் ஏதேனும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நெய்வேலி மாண்பமை சார்பு நீதிமன்றத்தில் நான் அளித்துள்ள சாட்சியத்தில் எனது தந்தை இறந்தபின்பு அவரது சொத்தில் எனது தாயார் உள்ளார் என்றும், நானும், எனது தாயாரும் தனித்தனியாக வசிக்கிறோம் என்று சாட்சியம் அளித்துள்ளேன் என்றாலும், இந்நீதிமன்றத்தில் அளித்துள்ள சாட்சியத்தில் நானும், எனது தாயாரும் ஒன்றாக சேர்ந்து மாவு அரைத்து விற்பனை செய்கிறோம் என்று கூறினேன் என்றாலும், இவற்றில் எவை சரி என்றால் நான் மாண்பமை சார்பு நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்த பின்பு மற்றும் எனது அண்ணி இறந்தபின்பு எனது அம்மா என்னுடனேயே வசிக்கிறார். எனது அண்ணன் வெளிநாடு சென்றுவிட்டார்.

7) எனது அண்ணி 2022 ம் ஆண்டு நவம்பர் மாதம் இறந்தார். நான் 04.11.2022 அன்றுதான் மாண்பமை சார்பு நீதிமன்றத்தில் மேற்படி சாட்சியம் அளித்துள்ளேன் என்றாலும், தற்போது வழக்கிற்காக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. சாட்சி தற்போது தனது அண்ணி 2022 ஆண்டில் இறந்தாரா அல்லது 2023 ஆண்டில்

இறந்தாரா என்று சரியாக ஞாபகமில்லை என்றும், அவர் இறந்த தேதிக்கான ஆதாரத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவும் தயாராக உள்ளதாகவும் சாட்சியம் அளிக்கிறார். எனது கணவர் மீது நெய்வேலி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் எப்போது புகார் அளித்தேன் என்றால் 31.08.2019 அன்று கொடுத்தேன். நான் சார்பு நீதிமன்றத்தில் எதிர்மனுதாரரை என்னுடன் சேர்த்து வைக்க கோரி மனு தாக்கல் செய்வதற்கு முன்பு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா அல்லது மனு தாக்கல் செய்தபின்பு புகார் கொடுத்தேனா என்றால் அந்த மனுவை தாக்கல் செய்வதற்கு முன்புதான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன்.

8) நான் காவல் நிலையத்தில் என்ன புகார் கொடுத்திருந்தேன் என்றால் என்னை எனது கணவர் வீட்டிற்கு அழைத்து செல்ல வேண்டும் என்று புகார் கொடுத்தேன். நகைகளை திரும்ப கேட்டிருந்தேனா என்றால் எனது கணவர் என்னை வீட்டிற்கு அழைத்து செல்ல முடியாது என்று கூறியதால் எனது வாழ்வாதரத்திற்காக எனது நகைகளையும், பொருட்களையும் திரும்ப கேட்டிருந்தேன். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணமானது நான் காவல் நிலையத்தில் எனது நகைகள் மற்றும் பொருட்கள் சம்மந்தமாக நான் கொடுத்ததுதானா என்றால் நான் கொடுத்ததுதான். (**மேற்படி நகைகள் மற்றும் பொருட்களின் பட்டியலின் நகல் எ.ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). அதே பட்டியலைதான் மாண்பமை சார்பு நீதிமன்றத்திலும், இந்நீதிமன்றத்திலும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் காவல் நிலையத்தில் புகார் அளித்தபோது எனக்கு படப்படப்பாக இருந்ததால் சில பொருட்களை அந்த பட்டியலில் குறிப்பிடாமல் விட்டுவிட்டேன். பின்னர் நீதிமன்றத்தில் அளித்த பட்டியலில் அனைத்து பொருட்களையும் குறிப்பிட்டு சரியாக கொடுத்துள்ளேன்.

9) நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் 25.06.2019 அன்று என்னை எதிர்மனுதாரர் வெளியேற்றியதாக குறிப்பிட்டுள்ள நிலையில் நான் ஏற்கனவே அளித்த

சாட்சியத்தில் 26.06.2019 அன்று வெளியேற்றியதாக கூறியுள்ளேன் என்றாலும் இதில் எது சரி என்றால் 26.06.2019 லிருந்து 28.06.2029 வரையுள்ள 3 நாட்களில் ஒரு நாள்தான் அவ்வாறு என்னை எதிர்மனுதாரர் வெளியேற்றினார். சரியான தேதி எனக்கு ஞாபகமில்லை. அவ்வாறு என்னை வெளியேற்றியதாக குறிப்பிடப்படும் நாளிற்கு பின்னர் இரண்டு மாதம் கழித்து புகார் அளித்துள்ளதாக கூறியுள்ள நிலையில் அப்போதும் நான் பதட்டமாக இருந்தேனா என்றால் எனது வாழ்க்கையே போய்விட்டது எண்ணும் நிலையில் நான் என் வாழ்க்கையை பார்ப்பேனா அல்லது பணம், பொருட்களில் கவனம் செலுத்துவேனா ?

10) காவல் நிலையத்தில் எத்தனை முறை என்னை விசாரித்தார்கள் என்றால் 3 முறை விசாரித்தார்கள். பின்னர் வழக்கறிஞர் என்னிடம் தனிமையில் பேசவேண்டும் என்று அழைத்தார், நான் செல்லவில்லை. அதன்பின்னர் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளபோது நான் அந்த விவரங்களை இந்த மனுவில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

**(எதிர்மனுதாரர் தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**